செ.வெ.எண்-49 நாள்-30.07.2021

**அரியலூர் மாவட்டம்**

# அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற 700 தொழிலாளர்களுக்கு ரூ.13 இலட்சத்து 2 ஆயிரத்து 200 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற 700 தொழிலாளர்களுக்கு ரூ.13 இலட்சத்து 2 ஆயிரத்து 200 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் இன்று (30.07.2021) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் **திரு.கு.சின்னப்பா** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.க.சொ.க.கண்ணன்** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தொழிலாளர்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் புலம்பெயர்ந்த வெளி மாநில தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் தொகுப்புகள் வழங்கப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரம் காக்கப்பட்டது.

மேலும், உடலுழைப்பு தொழலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் 17.03.1999 அன்று தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் உருவாக்கப்பட்டது. 2006 முதல் 2011 வரை தனி நலவாரியங்கள் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பதிவு செய்தல், புதுப்பித்தலின் பொது வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் 01.09.2006 அன்று முதல் முத்தமிழ் அறிஞரால் முழுமையாக ரத்து செய்யப்பட்டது. மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக 01.11.2008 முதல் மாவட்டங்கள் தோறும் தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியதன் மூலம், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னனி மாநிலமாக திகழ்கிறது.

இவ்வாறாக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியைப் பின்பற்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற 50 நாட்களில் 50,000 தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை இராயப்பேட்டை YMCA திடலில் 30.07.2021 இன்று துவக்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டத்தில் 18 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்துள்ள 472 தொழிலாளர்களுக்கு மாதந்திர ஓய்வூதியமாக ரூ.6,35,000/-ம், 207 தொழிலாளர்களுக்கு கல்வி உதவி தொகையாக ரூ.4,06,200/-ம், 8 தொழிலாளர்களுக்கு இயற்கை மரண உதவி தொகையாக ரூ.2,00,000/-ம், 12 தொழிலாளர்களுக்கு திருமண உதவி தொகையாக ரூ.58,000/-ம் மற்றும் 1 தொழிலாளிக்கு மகப்பேறு உதவி தொகையாக ரூ.3,000/-ம் என மொத்தம் 700 தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவியாக 13,02,200/- வழங்கப்படுகிறது. எனவே, தொழிலாளர்கள் அனைவரும் அரசின் திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக்கொண்டு தங்கள் வாழ்வினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) கு.விமலா, கண்காணிப்பாளர் ஜா.நூருல்லா அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**